செ.வெ.எண்:37 நாள்:22.06.2021

**நாமக்கல் மாவட்டம்**

**கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

----

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், காவல் கண்காணிப்பாளர் திரு.சரோஜ் குமார் டாகுர்.இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (21.06.2021) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கொரோனா நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா சிகிச்சை, காய்ச்சல் முகாம் நடத்துதல், கொரோனா நோய்த்தொற்று பரிசோதனை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டம் முழுவதும் வீடு, வீடாக சென்று பல்சாக்சி மீட்டர் கருவி கொண்டு ஆக்சிஜன் அளவு பரிசோதனை செய்தும், உடல் வெப்பநிலையை இன்ப்ராரெட் தெர்மாமீட்டர் கருவி கொண்டு பரிசோதனை செய்தும், பொதுமக்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆலோசனை வழங்குதல், சிகிச்சை அளித்தல், தனிமைப்படுத்துதல் நடவடிக்கைகள் ஆரம்ப நிலையிலேயே மேற்கொள்ளப்படுவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

கொரோனா நோய்த்தொற்று தடுப்பு பணிகளுக்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும், நாமக்கல் மாவட்டம் தளர்வுகள் அளிக்க முடியாத நோய்த்தொற்று அதிகம் உள்ள மாவட்டங்களில் ஒன்றாகத்தான் உள்ளது. இந்த நிலையை விரைவில் மாற்றி முழுமையாக நோய்த்தொற்று கட்டுப்படுத்தப்பட்ட மாவட்டமாக உருவாக்க வேண்டும்.

எனவே உள்ளாட்சி நிர்வாகங்கள் தங்கள் பகுதியில் வீடு, வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி சரியாக நடைபெறுவதை உறுதி செய்வதுடன், சளி, இருமல், காய்ச்சல் உள்ள நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ள உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, நோய்த்தொற்றின் ஆரம்ப நிலையிலேயே தங்களது உறவினர்களை அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதாரநிலையங்களுக்கு அழைத்து வந்து பரிசோதனை செய்து, சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் தேவையின்றி நடமாடும் பகுதிகளை கண்காணித்து, அவர்களுக்கு கொரோனா நோய்த்தொற்றின் தீவிரம் குறித்து விளக்கம் அளிப்பதோடு, அரசு

வழிக்காட்டுதலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். உள்ளாட்சி நிர்வாகங்கள் தங்கள் பகுதிகளில் அரசு அனுமதி வழங்காத கடைகள் செயல்படுகின்றனவா என்று கண்காணித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்துத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து கொரோனா நோய்த்தொற்று தடுப்பு பணிகளை குழுவாக மேற்கொண்டு, நாமக்கல் மாவட்டத்தை கொரோனா நோய்த்தொற்று இல்லாத மாவட்டமாக உருவாக்கிட வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, கோட்டாட்சியர்கள் திரு.மு.கோட்டைக்குமார், திருமதி.தே.இளவரசி, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.த.கா.சித்ரா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.எஸ்.சோமசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி.சி.சித்ரா, தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திரு.பச்சைமுத்து உள்பட அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**